**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC No. 264/2017 | Date | : 11.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.6 | Taluk | : |
| Name | : கிருஷ்ணகுமார் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.02.2026

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை**:

1. நான் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு மே மாதம் வரை நான் டிபிஎன் ஆர்த்தோ மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்தேன். அந்த சமயத்தில் என்னுடன் ஜான் குருபாதமும் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்தார். அவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சியம். கடந்த 29.06.2015 ஆம் தேதி நான் டிபிஎன் மருத்துவமனையில் பணிபுரிந்த போது வரதராஜன் வயது 43 என்பவரை மாலை 04:30 மணியளவில் மூன்று தெரிந்த நபர்களும் நான்கு தெரியாத நபர்களும், பாலாஜி குடோன், பெரியார் நகரில் கையால் குத்தி காலால் உதைத்ததாகவும் கூறி உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார்.

2. பின்பு அடுத்த நாள் 30.06.2015 ஆம் தேதி அன்று காலை 11:30 மணியளவில் அவருடைய உறவினரால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை எங்களுடைய மருத்துவ குழு பரிசோதனை செய்ததில் ஆறு வகையான காயங்கள் இருந்தன. 1) வலது

தோள்பட்டை பகுதியில் வலி மற்றும் வீக்கம் இருந்தது 2)வலது மார்பகப் பகுதியில் வலி மற்றும் வீக்கமும் 8x8 சென்டிமீட்டர் அளவில் ரத்த காயமும் இருந்தது. 3) வலது முழங்கை பகுதியில் நக கீறல் இருந்தது. 4) வலது முழங்கைக்கு மேல் பின் பகுதியில் 4x4 சென்டிமீட்டர் அளவிலான பல சிறாய்ப்பு காயங்கள் இருந்தன. 5) வலி மற்றும் வீக்கம் முதுகு மற்றும் சிறுநீரக பின் பகுதியிலும் இருந்தது. 6)நகக்கீரலானது 5x4 செ.மீ அளவில் இடது கழுத்து பகுதியில் இருந்தது. அவருக்கு மேற்கூறிய காயம் அடைந்த பகுதிகளில் எக்ஸ்ரே செய்து பார்த்ததில் எலும்பு முறிவு எதுவும் இல்லை என தெரிந்தது. மேற்கூறிய ஆறு காயங்களும் எங்கள் மருத்துவ குழுவால் கலந்து ஆலோசிக்கப்பட்டு சாதாரண காயங்கள் என கருத்து கூறி காயச்சான்று வழங்கப்பட்டது.

3. மேலும் அவர் இரண்டு நாட்கள் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். 01.07.2015 ஆம் தேதி சிகிச்சை முடிந்து மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்பட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்றிதழ் டிபிஎன் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டது தான். (**விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ. 2 ஆகவும், காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

**குறுக்கு விசாரணை**

ஒரு நபர் நிலை தடுமாறி சாலையில் கீழே விழும்போது மேற்கண்டவாறு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.02.11 17:29:57 -0800

Judicial Magistrate No.III,

Erode.